# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | | |
|---|---|---|---|
| துணர் ௨௪ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯<br>சருவதாரி—ஆடி | 1948—ஜுலை | மலர் ௪ |


பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

## இந்தியை எதிர்ப்பது முறையா?

நம் தமிழ் நாட்டின் தலைநக ரான சென்னையில் இந்தி எதிர்ப்பு நடைபெற்று வருகிறது. நாடோறும் பலர் சிறை புகுகின்றனர். நாடெங்கும் இந்தியை எதிர்க்கும் உணர்ச்சி பரவி நிற்கிறது. இவ்வாறு இந்தி மொழியை எதிர்ப்பது முறையா என்ற கேள்வி பலருடைய உள்ளத்திலும் எழுகிறது. முறையா, அல்லவா என்பது ஆராயத் தக்கது.

இன்று நம் நாட்டில் நடைபெறும் அரசியல், குடியாட்சி யாகும். தனி மனிதனுடைய வல்லான் வகுப்பு முறை, குடியாட்சிக்கு மாறானது. அந் நிலை அருவருக்கத் தக்கது, கண்டிக்கத் தக்கது என்பது குடியாட்சியின் கொள்கை. பல மொழிகள் வழங்கும் ஒரு நாட்டில் அயல் மொழியைக் கொணர்ந்து நாட்டவ ரெல்லோரும் கற்க வேண்டு மென்றால், அம் மொழியின் தொன்மை, வரலாறு, இன்று உலகில் நிலவும் பெருமொழிக் குரிய தகுதி முதலிய வற்றை மொழிநூல் வல்லாரைக் கொண்டு தேர்ந்து, ஏனை மொழி வல்லவர் பலரையும் கூட்டி அவரிடையே ஆராய் வித்து முடிபு கட்டுவது குடியாட்சி முறைமைக்குத் தக்கது; செல்வாக்கும் பணமு முடைய ஒருவர் இருவர் சொல்வதைக் கொண்டு ஒரு நாட்டவரை அந்த மொழி யைக் கற்க வேண்டுமென வற்புறுத்துவது முறையாகாது என்கின்றனர். இந்தி மொழி இந்திய நாட்டிலுள்ள மொழி கள் எல்லாவற்றிலும் மிகக் கீழானது; அரசியல், வாணிகம், பொருளாதாரம், கைத்தொழில் முதலிய எத் துறைக்கும்

ஏற்ற சொல்வளம் இல்லாதது; இலக்கிய மணமே காணு தது; கொச்சைப் பேச்சிலே நிலவும் சிறுமை யுடையது; வரலாற்றில் இடம் பெருதது; இதனைக் கொணர்ந்து உலகப் பொது மொழியாக நிலவக் கூடிய தமிழ் வழங்கும் நாட்டில் மேலே கூறிய ஆராய்ச்சி யின்றிப் புகுத்துவது மக்கள் உரிமையைச் சிதைக்கும் அழிவு வேலை யாகும்; ஆதலால் இச் செயல் அறவே எதிர்த்து ஒழிக்கத் தக்கதே யாம் என்கின்றனர்.

ஏனைத் தெலுங்கர், மலையாளர் முதலியோர் எதிர்க்காத போது, தமிழர் மட்டில் எதிர்ப்பது ஏன் என்று ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. இக் கேள்வி கேட்பவர் தெளிவு பெற வேண்டுமெனப் பின்னர்க் காணும் விளக்கங் கூறுகின்றனர்.

தமிழை யன்றி வேறே எம் மொழியும் தமிழ் நாட்டில் நிலவாத காலம் கடைச் சங்கக் காலமும், அதற்கு முற்பட்ட காலமு மாம். அக் காலத்தே தமிழர் பெருமை மேனுட்டிலும் கிழக்கே சீனு, சப்பான் நாடுகளிலும் பரவி யிருந்தது. தமிழ் நாட்டைத் தமிழ் வேந்தரே ஆண்டு வந்தனர். அரசியல், வாணிபம், வழிபாடு, மண முறை முதலிய குடி முறை யாவும் தமிழிலேயே நடந்தன. பின்பு களப்பிரர் என்ற வேற்று நாட்டவர் தமிழ் நாட்டிற் புகுந்தனர். அவர்களால் தமிழகம் சீர் குலைந்தது. வட நாட்டிலிருந்து புத்தரும், சமணரும் பிறரும் புகுந்து ஆங்காங்குத் தங்கித் தங்கள் வடமொழிக் கருத்துகளைச் சிறுகச் சிறுகப் பரப்பினர். களப்பிரர் தமிழகத்தில் நிலையாய்த் தங்காது, வருவதும் போவதுமா யிருந்ததனுல் தமிழர் வாழ்வு அத்துணைச் சீர்கேடு அடைய வில்லை. ஆயினும், தமிழ் வேந்தர் வலி குன்றி மறைந்தனர். அவர்கட்குப் பின் ஆரும் நூற்ருண்டின் பிற்பாதியில் பல்லவர் தொண்டை நாட்டில் தங்கி அரசு புரிந்தனர். அவர்கள் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் தான் தமிழ்க்கு முதன் முதல் கேடு விளையத் தொடங்கிற்று. அவர்கள் வடமொழிக்கே ஏற்றமும் ஆக்கமும் செய்தனர். அவர்களது ஆட்சி யிறுதியில் வட மொழியும் தமிழ் மொழியும் எழுதும் மணிப்பிரவாள மென்னும் நடை தொடங்கப் பெற்றது. அவர்கள் காலத்தில் தான் வட

சொற்களை, வட வெழுத்தை நீக்கி யெழுத வேண்டும் என்றிருந்த விதி உடைத்தெறியப்பட்டது. வட வெழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் கலந் தெழுதும் வழக்கம் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் உண்டாவ தாயிற்று. அவர்கள் பிறகு சிதைந்து தேய்ந்து தமிழ்க் குடிகளாய் மாறினர். வடமொழிப் பற்று மட்டில் அவ ரோடே யிருந்து தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே வந்தது. அவர்கட்குப் பின் இடைக்காலப் பாண்டியரும் சோழரும் தோன்றித் தமிழ் நாட்டைச் சற்றேறக்குறைய மூன்றரை நூற்றாண்டுகள் ஆண்டு வந்தனர். அவர்கள் பல்லவர்களைப் பின்பற்றிப் பெரிதும் வடமொழிக்கே ஏற்றம் தந்தனர். அரசியல் தமிழிலே நடந்த தென்றாலும், பல்லவர் காலத்தில் தோன்றிய மணிப்பிரவாள நடை ஒழியாமலே இருந்து வந்தது. கோயில்களில் வடமொழி புகுந்தது அவர்கள் காலத்தே யாகும். அவர்கட்குப் பின் விசய நகர வேந்தரும், நாயக்க மன்னரும், மராட்ட வேந்தரும் தமிழ் நாட்டில் இருநூற்றைம்பது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் வடமொழி பார்ப்பன மொழியாய்த் தமிழ் நாட்டில் பரவி நிலைபெறத் தொடங்கிற்று. இவ் வரலாற்று முறையால் தமிழர் தங்கள் தமிழ் மொழியை மறந்து வேற்று மொழிகட்கு அடிமையாயினர். தமிழிலக்கியங்கள் பல காப்பா ரற்று மாண்டன. எல்லாம் வடமொழியி லிருந்தே தோன்றின என்றும், தமிழ் முதலிய மொழிகளும் வட மொழியிலிருந்தே பிறந்தன என்றும், வடமொழியே தேவர் களும் முனிவர்களும் பேசுவது என்றும், வடமொழியி லிருந்தே கதைகள் கூட எழுத வேண்டு மென்றும் செல்வாக்குடைய ஒரு சாரார் விளம்பரம் செய்தனர். ஆகவே வட மொழியிடத்துத் தமிழர்களுக்கு ஆசை மிகுந்தது. தமிழைக் கைவிட்டனர். செல்வரைப் பாடி வயிறு வளர்க்கும் வகையில் சிலரே தமிழ் படித்தனர். செல்வாக்குடைய மிகச் சிலர் வடமொழி பயின்றனர். பயின்றவர், அதற்கே அடிமை யாகித் தங்கள் தாய் மொழி யாகிய தமிழை இகழ்ந்தும் புறக்கணித்தும் பேசினர். இதனல் படித்தவர் தொகை நூற்றுக் கொருவர் தானு முண்டோ என எண்ணக் கூடிய நிலைமை யுண்டாயிற்று. இவர்கட்குப் பின் முகமதியரும், அவர்கட்குப் பின் ஆங்கிலேயரும் ஆண்டனர். முகமதியர் காலத்தில் அவர்கள் வழங்கிய

அரசியற் சொற்கள், தாசில்தார், முன்சீப், தாலுகா, ஜில்லா, பிர்க்கா, ஜமாபந்தி, தாக்கீது முதலியன சில தமிழில் புகுந்து தமிழகத்து அரசியல் நாட்டுப் பிரிவுகளையும், அரசியல் பணியாளர்களையும் பெயர் தெரியா வகையில் கெடுத்தழித்தன. முடிவில் ஆங்கிலம் வந்தது. அதன் பயனாகத் தமிழன், தான் தமிழில் பேசுவதே தனக்கு மானக் குறைவாகப் பேசக் கூடிய நிலையை யடைந்தான். இந்த நிலை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நீங்கக் கூடிய வாய்ப்பைப் பெறுவ தாயிற்று. ஆங்கிலத்துக்கு அடிமையாய்த் தன்னை மறந்து, தன் தமிழையும் இழந்து, தமிழ் வாழ்வும் சீரிழந்து போனதைத் தமிழன் உணர்ந்தான். தன் பண்டைய வரலாற்றைச் சிறிது எண்ணினான். கடல் கடந்தும், மலை கடந்தும், பல நாடுகளைக் கடந்தும் சென்று பொருள் செய்த தன் வாணிகப் பெருமையும், அரசியல், வாணிகம், பொருளாதார முதலிய துறைகளில் மேம்படுதற்கு அமைந்த உணர்வும் சொல்லும் வழங்கிய தமிழ் மொழியின் தனிப் பெருமையும் அவன் அறிவுக் கண்ணுக்குத் தோன்றின. ஆயினும், ஆங்கில மொழிக்கு அடிமையாய், அந்த அடிமைத் தளையி லிருந்து நீங்க மாட்டானாய்த் தமிழன் வருந்தினான். ஆங்கில ஆட்சி நம் நாட்டிலிருந்து நீங்குதற் குரிய உரிமைப் போர் உண்டாவதாயிற்று. இப்போரில் வெற்றி யுண்டானால் தன் தமிழை, இமயத்தின் அடிகாறும் பரவியிருந்த தன் தமிழை, அரசியல் தலைமொழியாக வைத்து அறிவியல், வாணிகம், பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் விரிந்த இலக்கியப் பண்புடையதாய்த் திகழச் செய்யலாம் என எண்ணி உரிமைப் போரில் தலையிட்டான். போரெனில் பெரு விருப்பம் கொள்ளும் தமிழ்ப் பண்பு அவன் உள்ளத்தில் சிறிது அரும்பிற்று. ஆங்கிலர் தமது ஆட்சியுரிமையை விட்டு நீங்கினர். தான் விரும்பிய அரசியல் உரிமையைத் தமிழன் பெற்றதாக எண்ணினான். இதற்கிடையே உரிமைப் போரின் இறுதிப் போர் வர விருக்கையில், தமிழ் நாட்டுத் தமிழைப் புறக்கணித் தொதுக்கி, அதனிடத்தே இந்திக்கும் வட மொழிக்கும் இடந்தரப்பட்டது. அது கண்ட தமிழன் உளம் துடித்தான்; தன் தமிழ்ப் பண்புக்கும், தமிழ் அறத்துக்கும், தமிழ் அரசுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் தமிழ், தமிழனாகிய தான் உயிர் வாழும் போதே புறக்

(இதன் தொடர்ச்சி 117 ஆம் பக்கம் பார்க்க.)

# திருக்குறள்

## பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B.A. (Hons), Ph.D.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 3, பக்கம் 92.)

### கூடா வொழுக்கம்

இனி, மழித்தலு நீட்டலும் வேண்டா வென்றமையானே, அவற்றானுப வேடங்கள் பெரும் பயன் தராவிடினும் சிறு பய னுதவு மென்பதும் கூறியவாறு காண்க. வேடத்தை ஏற்றுக் கோடல் எற்றுக் கெனின், துறவை மேற்கொண்டு நின்று தவஞ் செய்வார் சிலர் தமக்கு ஒருகால் பரிசயத்தான் பொரு ளின்பங்களில் பற்றெழின், 'யான் தவ வேடங் கொண் டேனே! பொரு ளின்பங்களைக் கோருவே னாயின், பிறர் எள்ளுவாரே! என்னும் எண்ணம் அப்பொழுதே யுண்டாகித் தம்மை அவற்றினின்றும் நீங்கச் செய்யும் என்பது கருதியும், தாம்தாம் ஒருகால் இணை விழைச்சு நலிவாற் பிற ரறியா வகைப் பெண்வழிச் செல்லின் அப் பெண் 'இவர் தவத்தவரே! இவருக் கிணங்கின் இவரது தவத்தைக் கொன்ற பாவம் எனக்குப் படுமே' என்ற எண்ணத்தான் உடம்படாமை காட்ட, அவ் வுடம்படாமையே காரணமாகத் தமக்கு இணை விழைச்சில் வெறுப்புத் தோன்றி அதன்வழித் தவத்தின் முயறல் மேற்படு மென்பது கருதியும், தவ வேடங் கொண்டு நிற்ப ரென்க.

இனிப் புலன்கள் மேற செல்லு மறிவு ஓாளவிற்கு அடங் கப் பெற்றாரே தவஞ் செய்வார் என்பது பற்றியும், அவ் வடங் கல்தானும் தம் மனத்தாற் செய்யும் பாவனை காரணமாக வரு மென்பது பற்றியும், ஓரோ வொருகால் தவஞ் செய்வார்க்கு

விடயப் பற்றெழின் அப் பற்றை வேடங் கொண் டறுத்தலே யன்றித் தம் அகப் பாவனை கொண் டறுத்தல் கூடு மென்பது பற்றியும், அப் பற்று முறுகின தொன் ருயின் அப் பாவனையே யன்றி வேடம் அப் பற் றறுத்தற்குப் பய னற்ற தொன்று என்பது பற்றியும், வேடம் சிறு பயனே யுதவு மென்பது காண்க.

இனி, வேடங் கொண்டா ராவார் ஒரு தவறு செய் யினும் உலகம் பொரு தென்ற காரணத்தாலும், அங்ஙனம் ஒரு பிழை செய்தார்க்கும் வீடுபே ருகிய பயன் கைவரல் சாலும் என்ற காரணத்தாலும், வேடம் மேற்கொண்டு கூடா வொழுக்கத்தினைத் தவிர்தல் நன்ருன தொன் றல்ல என்பது படவும் மழித்தலு நீட்டலும் வேண்டா வென் று கூறியவா ருயிற்று.

இப் பாட்டாற் கூடா வொழுக்க மில்லாதார்க்கு வேட மும் வேண்டா வென அவரது சிறப்புக் கூறப்பட்ட தென்று பரிமேலழகர் கூறினு ரெனின், வேடமும் வேண்டா வென் பதன்கண் ணுள்ள உம்மை கூடா வொழுக்கத்தினைக் கடிந் தார்க்கு அது கடிதற் பொருட்டுப் புறத்தே வேடமும் வேண்டா, அகத்தே மனப் பாவனையும் வேண்டா வென்பதே தரு மாகலானும், ஒன்றைக் கடிந்தார்க்கு அதனைக் கடியுஞ் சாதனங்கள் வேண்டாமை அவர்க்குச் சிறப்புக் கொடுக்கு மென்பது வெறும் உபசாரக் கூற்றே யாகலானும், அழகியார் கூற்றுப் போலி யாயவாறு காண்க.

இப் பாட்டு என் னுதலிற்ருே வெனின், தவ வேடங் கொண்டு தவத்தினைச் செய்வா ராவார் செய்யு மொரு பிழை யைத்தானும் பிறர் பொருது அவ ருயிர் உடம்பி னிற்குந் துணையும் குற்றங் கூறி அவர் செய்யுந் தவத்தினை யலைப்பா ராகலான், அன்ஞர் வேட மின்றியே அகத்தாற் கூடா வொழுக்கத்தைத் தவிர்க எ-து.

10. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்

இ-ள். கணை கொடிது யாழ் கோடு செவ்விது ஆங்கு—அம்பு கொடிது யாழ் கோட்டாற் செவ்விது என்பனவற்றை வடிவா னன்றி அவற்றினுட் கிடந்த தொழில் பற்றிக் கொள்ளுமாறு போல; அன்ன வினைபடு பாலால் கொளல்—தவஞ் செய்வாரையும் கொடியர் செவ்வியர் என்னும் அத் தன்மையானவற்றை வேடத்தா னன்றி அவர் செயல் தோன் றிய கூறுபாட்டானே கொள்ளுக; கொள்ளின் தவஞ் செய்வா ராவார் கூடாவொழுக்கத்தைத் தவிர்தல் வேண்டும் எ—து.

கொடிதி யாழ் என்பதில் உகரங் கெட்டுக் குற்றிய லிகரம் வந்தது 'யகரம் வருவழி யிகரம் குறுகும்' என்னுஞ் சூத்திரத்தா னென்க. யாழ் கோடு செவ்விது என்றது சினையின் றொழிற் பண்பை முதல்மே லேற்றிக் கூறும் வழக்கா றுயது. ஆங்கு வினையுவமையை யறிவிக்கும் உவமச்சொல். அதனைக் 'கயநா டியானையின் முகனமர்க் தாங்கு' என்பதனானு மறிக. அன்ன வினைப்பெயர். பாலால் என்பதில் மூன்ற னுருபு ஞாபக வேதுப் பொருளது. கொளல் என்பது அல் லீறாய் வந்துஏவல் கண்ணிய உடன் பாட்டு வியங்கோள்.

அம்பு வடிவாற் செவ்வி தாயினும் அதனுட் கிடந்த செயல் கொலை. யாழ் வடிவால் வளைந்த தாயினும் அதனுட் கிடந்த செயல் கோடு காரணமாக இன்னிசை. அவ் வாறே தவஞ் செய்வாரையும் அவர் புறச் செய லாகிய வேடத்தா னன்றி அவ ரகத்தே கிடந்த ஒழுக்கம் பாவ மாயிற் கொடிய ரென்றும் அறமாயிற் செவ்விய ரென்றுங் கொண்டு நின்று கூடாவொழுக்கத்தைத் தவிர்க என்று கூறியவா றாயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'அம்பு வடிவாற் செவ்வி தாயினும், செயலாற் கொடிது; யாழ் கோட்டால் வளைந்த தாயினும் செயலாற் செவ்விது; அவ் வகையே தவஞ் செய்

வோரையுங் கொடியர் செவ்விய ரென்பது வடிவாற் கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்து கொள்க' என்னும் உரையையும், 'கணைக்குச் செயல் கொலை, யாழுக்குச் செயல் இசையா லின்பம் பயத்தல்; அவ் வகையே செயல் பாவமாயிற் கொடிய ரெனவும், அற மாயிற் செவ்விய ரெனவும் கொள்க வென்பதாம். இதனான் அவரை யறியுமாறு கூறப்பட்டது.' என்னும் உரைவிளக்கத்தையுந் தந்தனர்.

யாழ் கோடு செவ்வி தென்பதற்கு யாழ் கோட்டால் வளைந்த தாயினும் செயலாற் செவ்விது என்னும் உரை வலிந்துரை யாதல் காண்க.

இனிப், பரிமேலழகர் இப் பாட்டான் அவரை யறியுமாறு கூறப்பட்ட தென்றா ரெனின், கொடியர் செவ்வியர் என்பது ஒருவர் அகவொழுக்கம் பற்றி யறியப்படும் என்பது உண்மையே யாயினும், ஒருவரைச் சுட்டி இவர் கொடியர் செவ்விய ரென்று கூறுதல் அவர்தமது அகவொழுக்கத்தை மறையாது புலப்படுத்தி நின்றா லன்றி முடியா தாகலானும், சிலர் தமது அகவொழுக்கத்தை மறைத்தே நிற்ப ராகலானும், அவரை யறியுமாறு கூறப்பட்ட தென்பது பயனில் கூற் றாயினவாறு காண்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், தவஞ் செய்வா ராவார் கொடுமை யென்னும் பண்பை நீக்கிச் செம்மை யென்னும் பண்பை ஆள வேண்டின், அன்னார் கூடாவொழுக்கத்தைத் தவிர்க எ—து.

(தொடரும்)

# தமிழ் எழுத்துக்களும் அடையாளங்களும் *

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

உலகின்கண் உள்ள சிறந்த மொழிகளில் தமிழ் ஒன்று என்று பொதுவாகச் சில அறிஞர் கூறுவர். பல மொழிகளுக்குள் தாயாக இருப்பது நம் தமிழ் மொழியாம். எளிய முறையில் அரிய கருத்துக்களை உள்ளடக்கி மிளிரும் நுண் மொழி எனக் கண்டனர், தமிழ் மொழி ஆராய்ச்சியாளர். நுண் மொழி என்பதைக் காண இரண்டொரு உதாரண மூலமாகவே யாவருந் தெரிந்துகொள்வர்.

(1) பிற மொழியில் ஒலிக்க இயலாத ற, ன, ழ, எ, ஒ, ஃ.

(2) பிறமொழியில் ஒலிக்க இயலா தென்றெண்ணும் எழுத்துக்களைத் தமிழில் ஒலிக்கலாம்.

(அ) ஆங்கிலம்: F, Z எஃப், இசற்,ஃ

(ஆ) ஷ, ஸ, க்ஷ, ஹ—ஃழ, ஃச, ஃக்ழ, ஃக, என முறையே ஒலித்துக் காண்க.

இவ் வித நுண் ணுணர்வோ டாய்ந் தமைத்த தமிழ் எழுத்துக்களைத் தற்காலத்திற் கேற்ற வாறு பல் வழிகளிலும் பயனுறவும், சில் நாழிகையில் பல் படிகள் எடுத்து வழங்கவும் ஏற்ற முறையில் (டைப்) தமிழ் எழுத்துப் பொறி மிகவும் கடினமாயும் எழுத்துக்கள் மிகுதியாயும் இருக்கின்ற காரணத்தினால், ஆங்கில (டைப்) எழுத்துப் பொறியைப் போலக் கையாள முடியாத நிலையில் இருக்கின்றது என்பதை உணராமலிரார். ஆனால், மொழி எழுதியுள்ள ஏட்டின் நிலை தெரியாது

* உரிமை எழுதுவோரதே.

ணை, னை, ளை முதலியன ணை, னை, போல என் இருந்திருக்கக் கூடா தென இக் காலத்தில் சிலர் வழக்கிடுவர்.

இவ் வேறுபாடுகள் காரண மின்றி நுண் மொழியாளர் அமைப்பாரா? உ-ம்: கண்ணனை, கண்ணனை, என்றும் பிள்ளை, பிள்ளை. என்றும் படிக்கலாம். இவை எழுதுவோர் படிப்போரின் திற னில்லாமையால் நேர்ந்த பாட வேறுபாடுகளோடு மிகுதியும் வீண் நேரம் போக்குக் கிடமாகும் எனக் கண்ட நுண்ணறிவாள ராகிய முன்னோர் வேறுபடுத்தி வழங்கின ரெனத் தெளிக. பனை ஓலைக் காலம் போய் மிகச் சுருங்கிய காலத்தில் விளக்கமாகப் பல் துறையிலும் நம் தமிழ்மொழி வளர்ச்சி யடைகின்ற இக் காலத்திற்குக் கீழ்க் கண்டவாறு அமைத்துக் கொள்ளல் சாலச் சிறப் புடைத் தாகும்.

உயிர் 12, மெய் 18, ஃ 1 ஆக, 31 எழுத்துக்களே போதுமென்பர்.

உ-ம். எ, ழ்+உ, த், த்+உ, ப், ப்+ஒ, ற்+இ=எழுத்துப் பொறி எனப் படிக்கவேண்டும். இது சுருக்கமான நல்ல முறையாகக் கருதப்பட்டாலும், I F, II F வகுப்பில் நாற்பது மாணவர்களில் இரண்டொரு கூரிய அறி வுள்ள மாணவர்களே படிக்கின்றார்கள். ஆகவே, நூற்றுக்கு 5 மாணவர்கள் அறியும் முறை மிகுதியும் பயன் படாது. இருக்கின்ற திருத்தங்களுள் சுதேசமித்திரனில் வெளிவந்துள்ள திருத்தம் (ு, ூ) உகர ஊகாரக் குறிகள் வடமொழிச் சாயலாக இருப்பினும், ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் அமைந்துள்ளன. ஆனால், அத் திருத்தத்திலும் எண்ணிக்கை, பிற அடையாளங்கள் காணப்பட வில்லை. தமிழ் எழுத் தாய்வோர் ஆய்ந்து முடிவாக வெளியிட என் முறையையும் கீழே தருகின்றேன். நடுநிலை தவறாமல் மொழி வளர்ச்சியை மாத்திரம் கருதுவோர் குற்றமாகக் கருதார்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௦ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ |
| ா | ⌒ | ° | ▬ | ி | ெ | ே | ண | o | ஓ |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப | ம |
| – | ? | ( | ) | “ | ” | . | , | ! | * |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ய | ர | ல | வ | ழ | ள | ற | ன | ஃ | ஜ |
| ஹ | ஷ | ஸ | க்ஷ | $\frac{1}{2}$ | $\frac{3}{4}$ | $\frac{1}{4}$ | பற்று | வரவு | — |

1—2—முதற் கோடு நேராக அதாவது எழுத்துக்களுக்கு நடுவிலும், இரண்டாவது எழுத்துக்களுக்குக் கீழ் வரும் கீழ்க் கோடு மெனக் கொள்க.

மேற் காட்டிய எழுத்துக்கள், அடையாளங்களில் மிகுதியும் பயன்படும் முறையில் முன் பின்னாக மாற்றி யமைக்க விரும்பினால் போற்றற் குரியதே.

இன்னுஞ் சிலர் ச, க முதலிய எழுத்துக்களுக்கு மற்றைய மொழிபோல மேற்கோடு, கீழ்க்கோடு முதலியன இட்டு க(4), ச(4), த(4), ப(4) என்று கொள்ளலாம் என்பர்.

இதுவும் மொழிப் போக்கிற்கு வேண்டிய தொன் றன்று. (உ-ம்) பஞ்சு, பச்சை இரண்டிலும் உள்ள எழுத் தாகிய ப ஒன்றே வரிவடிவில் காணப்பட்டாலும், ஒலிக்கு மிடத்து மெல்லெழுத்தைச் சாரின் மென்மையும், வல்லெழுத்தைச் சாரின் வன்மையும் ஒலித்தலைக் கண்கூடாகக் கண்டு தெளிக.

அச்சுப் பொறியையும் இம் முறையில் மாற்றி யமைத்தல் நல மாயினும், புதிய முறையில் எழுத்துக்களைப் பயின்ற மாணவர் இது வரையில் அச்சான புத்தகங்களைப் படிக்க இடர்ப்படுவர். ஆகையால், அச்சை மாற்றும் போது இதுவரை

யில் உள்ள எல்லா நூல்களையும் புதிய முறையில் அச்சிட்டுப் பல இடங்களிலும் அறியச் செய்யவேண்டிய கடமையை மறக்கக்கூடாது என்பதும் எண்ணத் தக்கதே.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழ் எழுத்து மிக எளிமையும் ஆராய ஆராய மிக நுட்பமு முடையது என்பதும், முற்கால எட்டெழுத்திற் கேற்றவாறு முன்னோர் எழுத்துக்களிற் சில வற்றைக் கொண்டுள்ளார்க ளென்பதும், இக் கால மொழி வளர்ச்சிக் கேற்றவாறு சில திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுதல் இன்றியமையாதது என்பதும், திருத்த எழுத்துக்களைச் சிலர் அறியும் முறையைவிடச் சுதேசமித்திரனில் வெளியாகி யுள் ளது கொள்ளத் தக்கது என்பதும், அதிலும் எண் அடை யாளங்கள் இல்லை, ஆகையால் அவற்றையும் சேர்த்து மேற் காட்டியவாறு அமைத்தால் நல முண்டாகும் என்பதும், க, ச முதலிய எழுத்துக்களுக்கு வேற்று அடையாளம் வேண்டிய தில்லை, ஒரு எழுத்தே இட நோக்கி அமைந்திருப்பனவற்றைப் பழகியவர் அறிவர் என்பதும், அச்சுப்பொறியையும் மாற்றி யமைப்பின் நலம், ஆனால் தமிழி லுள்ள எல்லா நூல்களையும் அச்சிட வேண்டிய கடமை உண்டு என்பதும், பல முறை வரும் எழுத்துக்களை யறிந்து முன் பின்னாக மாற்றி யமைக்க விரும்பினால் மாற்றலாம் என்பதும் குறித்த பொருள்களாகக் கொள்க.

(தொடரும்.)

# திருச்சிராப்பள்ளி.

திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தார்,
ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தென்னிந்தியாவி லுள்ள புகைவண்டி நிலையங்களுள் முதன்மை பெற்று விளங்கும் திருச்சிராப்பள்ளியைப் பலரும் அறிவர். நம் அரசாங்கத்தார், சுதந்திர இந்தியாவில் ஊர்கள் எல்லாம் தம் பழைய பெயர்களோடு நின்று நிலவ வேண்டுமென்ற கருத்தினராய், இப்பொழுது சில ஊர்களின் பெயர்களை மாற்றியுள்ளனர். அவற்றுள் திருச்சிராப்பள்ளி என்பதும் ஒன்றாகும். அப் பெரு நகரின் பண்டைப் பெயர் யாது என்பதை ஈண்டு ஆராய்வாம்.

கடைச் சங்க நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில்[1] 'கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது—நெடும் பெருங் குன்றம்' என்று உறையூருக்குக் கிழக்கே ஒரு குன்று கூறப்பட்டுள்ளதே யன்றி, அதன் பெயராதல், அஃது அமைந்துள்ள ஊரின் பெயராதல் அப் பாடலில் குறிக்கப்பட வில்லை. சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அக் குன்றின்மேல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ள சிவபெருமான் மீது பாடியுள்ள பதிகங்களில்தான் சிராப்பள்ளி என்ற பெயர் காணப்படுகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொண்டை நாட்டையும் சோழ நாட்டையும் ஒருங்கே ஆட்சி புரிந்த பல்லவ வேந்த னாகிய முதல் மகேந்திர வர்மன் என்பவனே சிராப்பள்ளிப் பெருங் குன்றைக் குடைந்து, அங்குச் சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தவன் என்பது ஆராய்ச்சியால் அறியப்படுகின்றது. வடமொழியில் சிறந்த புலமை பெற்றிருந்த அவ் வேந்தன் எட்டுச் சுலோகங்கள் இயற்றி, அவற்றைத் தான் எடுப்பித்த சிராப்பள்ளிச் சிவன் கோயிலில் பொறித்துள்ளனன்; அச் சுலோகங்களில், தான் புறச் சமயத்திலிருந்து திரும்பிச் சிவ நெறியைக் கடைப்

1. அகம்.

பிடித்துச் சைவ ஞகியதையும், சிராப்பள்ளிக் குன்றின்மேல் குகைக் கோயிலில் சிவலிங்கத்தை எழுந்தருளுவித்ததையும் குறிப்பிட்டுள்ளான்.[2] அச் செய்திகளை நுணுகி நோக்குமிடத்து, அம் மன்னனது ஆட்சியின் பிற்பகுதியில் தான் சிராப்பள்ளிக் குன்றில் சிவாலயம் அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், அதற்கு முன்னர் அவன் சமண் சமயத்தைக் கைக்கொண் டொழுகிய காலத்தில் அங்குச் சிவாலயம் இருந்திலது என்பதும் நன்கு புலனாகின்றன. சமணர்களால் கருங்கல்லிற் பிணித்துக், கடலில் போடப்பெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள், சிவபெருமான் திருவருளால் அக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்து,[3] திருப்பாதிரிப்புலியூரை யடைந்து திருக்கோயிலுக்குட் சென்று, 'ஈன்ருளுமாய்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி இறைவனை வணங்கினர் என்பது பெரிய புராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணத்தால் அறியப் பெறும் ஓர் உண்மை வரலாருகும். அந் நிகழ்ச்சி தான் மகேந்திரவர்மன் சமண் சமயந் துறந்து, சைவ ஞகும்படி செய்து விட்டது என்பது தேற்றம். அந் நாட்களில், திருப்பாதிரிப்புலியூர் என்று வழங்கும் பாடலிபுரத்தி லிருந்த ஓர் அமண் பள்ளியை இடித்துத் திருவதிகை நகரில் தன் பெயரால் குணபரேச்சுரம் என்ற சிவன் கோயில் ஒன்று அவ் வரசன் அமைத்தனன். இச் செய்தியைச் சேக்கிழாரடிகள், தம் பெரிய புராணத்தில், கூறியுள்ளனர்.[4] அவனுக்குக் குணபரன் என்னுஞ் சிறப்புப் பெயர் உண்டு என்பது அவனுடைய

---

2. South Indian Inscriptions, Vol. I, Nos. 33 and 34.
3. இந் நிகழ்ச்சியைத் திருநாவுக்கரசு அடிகளும், தாம் பாடிய திருநீலக்குடிப் பதிகத்தில்,
   'கல்லி ஞேடெனைப் பூட்டி யமண்கையர்
   ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினுல்
   நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
   நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே'
   என்ற திருப்பாட்டில் குறிப்பிடுதல் காண்க.
4. பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனர் புராணம், பா. 146.

சிராப்பள்ளிக் கல்வெட்டுக்களாலும், செங்கற்பட்டிற்கு அண்மையி லுள்ள வல்லத்திற் காணப்படும் அவன் கல்வெட்டு ஒன்றாலும் நன்கறியக் கிடக்கின்றது.[5] ஆகவே, சேக்கிழாரடிகள் கூறியுள்ள அச் செய்தி பெரிதும் உறுதியெய்துதல் உணரற்பால தாகும். அங்ஙனமே, அவன், தன் நாட்டி லிருந்த பல அமண் பள்ளிகளை இடித்து, அவ்விடங்களில் சிவன் கோயில்கள் அமைத்திருத்தல் வேண்டும். அவற்றுள் சிராப்பள்ளிக் குன்றின்மே லுள்ள சிவாலயமும் ஒன்றாகும். அவ் வுண்மை, அக் கோயிலில் காணப்படும் அவனுடைய வடமொழிக் கல் வெட்டுக்களாலும்[6], அக் குன்றின் உச்சியில் வரையப்பெற் றுள்ள வேறு சில கல்வெட்டுக்களாலும் வலியுறுகின்றது.

இனி, சிராப்பள்ளிக் குன்றின்மே லுள்ள உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறத்தில் பல சமண முனிவர் களின் கற்படுக்கைகள் தலையணைகளோடு இருத்தலை இன்றுங் காணலாம். அத் தலையணைகளில் அவற்றை உபயோகித்த சமண முனிவர்களின் பெயர்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவ் வெழுத்துக்களைக் கொண்டு அவற்றின் காலத்தை ஆராய்ந்த கல்வெட்டுத் துறை அறிஞர்கள், அவை கி. பி. ஐந்தாம் நூற் றாண்டில் அமைக்கப்பெற் றிருத்தல் வேண்டும் என்று கூறு கின்றனர்.[7] எனவே, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் அக் குன்றின்மேல் சில சமண முனிவர்கள் தங்கித் தவம் புரிந்து கொண் டிருந்தனர் என்பது நன்கு தெளியப்படும். அவர்களுள் ‘சிரா’ என்ற முனிவர் ஒருவர் இருந்தமை அங்குள்ள கல் வெட்டுக்களால் அறியப்படுகின்றது.[8] அம் முனிவர் அத் தவப் பள்ளியின் தலைவரா யிருந்தமை பற்றி அது சிராப்பள்ளி என்று முதலில் வழங்கத் தொடங்கி, அவர் காலத்திற்குப் பின்னரும் அப் பெயரோடு நின்று நிலவுவ தாயிற்று. முதல் மகேந்திர

5. Vallam Cave Inscriptions of Mahendra Potaraja, S. I. I., Vol. II, No. 72.
6. S. I. I., Vol. I, Nos. 33 and 34.
7. Annual Report on South Indian Epigraphy for 1937-38—Part II, Para 3.
8. *Ibid*, Page 78.

வர்மனும், தன் ஆட்சியின் முற் பகுதியில், அத் தவப் பள்ளியை ஆதரித்துப் போற்றி வந்திருத்தல் வேண்டும் என்பது, அவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று அங்குப் பொறிக்கப் பெற்றிருத்தலால், நன்கு துணியப்படும். திருநாவுக்கரசு அடிகள் பொருட்டுச் சிவபெருமான் நிகழ்த்திய அரிய நிகழ்ச்சிகளை அறிந்த அப் பெருவேந்தன் அமண் சமயத்தை வெறுத்துச் சைவனாயினமை முன்னர் விளக்கப்பெற்றது. அந் நாட்களில் தான் அவன் சிராப்பள்ளி என்னும் அமண் பள்ளியை இடித்து, அக் குன்றின்மேல் சிவன் கோயில் எடுப்பித்திருத்தல் வேண்டும். அச் சிவாலயமும் சிராப்பள்ளி என்னும் பழைய பெயருடன் வழங்கி வருவதாயிற்று. சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தம் காலத்தில் வழங்கி வந்த சிராப்பள்ளி என்ற அப் பெயரைத் தாம் அக் கோயிலில் பாடியருளிய பதிகங்களில் குறிப்பிட்டுச் செல்லுவாராயினர். ஆகவே, சிரா என்ற சமண முனிவரது தவப் பள்ளியின் பெயராயிருந்த சிராப்பள்ளி என்பது பின்னர் முதல் மகேந்திரவர்மன் அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெயராக மாறிவிட்டமை அறியத் தக்கது.

நம் தமிழ் நாட்டில் சில ஊர்களிலுள்ள திருக்கோயில்களுக்குத் தனிப் பெயர்கள் முற் காலத்தில் வழங்கி வந்தன என்பது சமய குரவர் அருளிய தேவாரப் பதிகங்களாலும், கல்வெட்டுக்களாலும் புலப்படுகின்றது. உறையூரிலுள்ள கோயில் மூக்கீச்சுரம் எனவும், கருவூரிலுள்ள கோயில் ஆனிலை எனவும், பழையாறையிலுள்ள கோயில்கள் பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம் எனவும், திருநறையூரிலுள்ள கோயில் சித்தீச்சுரம் எனவும், கொட்டையூரிலுள்ள கோயில் கோடீச்சுரம் எனவும், கோவந்தபுத்தூரிலுள்ள கோயில் விசயமங்கை எனவும், சாத்தனூரிலுள்ள கோயில் ஆவடுதுறை எனவும், சாத்தமங்கையிலுள்ள கோயில் அயவந்தி எனவும், காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள கோயில் பல்லவனிச்சுரம் எனவும், பெண்ணுகடத்திலுள்ள கோயில் தூங்கானைமாடம் எனவும், திருவெண்ணெய் நல்லூரிலுள்ள கோயில் அருட்டுறை எனவும், திருப்புறம்பயத்திலுள்ள கோயில் ஆதித்தேச்சுரம் எனவும், தஞ்சாவூரிலுள்ள கோயில் இராசராசேச்சுரம் எனவும் பெயர்

எய்தி யிருந்தன என்பதைத் தேவாரப் பதிகங்களாலும், அவ்வூர்களி லுள்ள கல்வெட்டுக்களாலும் அறியலாம். அம் முறையில் சிராப்பள்ளி என்பது கோயிற் பெயரா யிருத்தலால், அக் கோயில் அமைந்துள்ள ஊரின் பெயர் யாது என்பது இனி ஆராய்தற் குரிய தாகும்,

திருச்சிராப்பள்ளியில் முதல் இராசராச சோழனது ஆட்சியின் பதினாரும் ஆண்டாகிய கி. பி. 1000 இல் வரையப்பட்டுள்ள கல்வெட் டொன்று,[9] விக்கிரம சிங்க மூவேந்த வேளான் என்பவன் ஒருவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் விலைக்கு வாங்கி, அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரி லுள்ள சிராப்பள்ளிக் கோயிலுக்கு அளித்தனன் என்று கூறுகின்றது. அதனை ஆராயுமிடத்து, அத் தலைவனால் இறையிலி நிலம் வழங்கப்பெற்ற சிவன் கோயில் சிராப்பள்ளி என்னும் பெய ருடையது என்பதும், அக் கோயில் அமைந்துள்ள நகர் சிற்றம்பர் என்னும் பெய ருடையது என்பதும், அந் நகர் உறையூர்க் கூற்றத்தில் உள்ள தென்பதும் நன்கு புலனாதல் காண்க. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் முதல் வரகுண பாண்டியனது ஆட்சியின் பதினொன்றும் ஆண்டில் அக் கோயிலில் பொறிக்கப்பெற் றுள்ள வேறொரு கல்வெட் டொன்றும்,[10] அவ் வுண்மையை உறுதிப்படுத்துதல் உணரத் தக்கது.

அது,

'கோமாறஞ் சடையற்கு யாண்டு நான்கு நாள் ஈராயிரத்தைந் நூற்றொருன்று வேம்பில் மதிளழித்துப் போந்து நியமத்திருந்தருளி சோமசூர்யாங்வயத்வய
திலகாலங்காரர் ஆயின பாண்டியாதிராஜர் வரகுண
தேவர் திருமலை படாரர்க்குக் கொடுத்த பொன்
பாடிக்கல்லால் ஈஉடு நூற்றிருபத்தைஞ் கழஞ்சும்—
இப்பொன் முதனிற்க பொலிகொண்டு முப்பதின்
கழஞ்சு பொன்னின் பொலியால் ஒரு நொந்தா விளக்

9 Ins. 412. of 1904; Archaeological Survey of India, Annual Report for 1903—04, P. 271.

10 *I bid* page 275.

> காக நூற்றிருபதின் கழஞ்சு பொன்னால் நாலு நொந்தா விளக்கெரியக் காண நாழியால் நிசதி அட்டக் கடவ நெய் இருநாழி—நின்ற ஐங்கழஞ்சு பொன்னாலும் திங்கடோறும் திங்கட்டிருவாதிரை நான்றவ் விராப் புலருமளவும் ஐந்து விளக்கெரிய அட்டக் கடவ நெய் இருநாழி யுரி—இவ் வொட்டின பரிசு நெய் அட்டி இத் திருவிளக் கெரிப்பான் இப்பொன் நூற்றிருபத் தைங் கழஞ்சுங் கொண்டோம் சிற்றம்பர் நகரத்தோம்—இவ்வொட்டின பரிசு நெய் அட்டுவிப்பதற்கு அமைந்து பிணைப் பட்டோம் சிற்றம்பர் பதியும் பாத மூலத் தோமும்—இது பன்மாகேஸ்வரர் இரக்ஷை'—

என்பதாம். இக் கல்வெட்டில் அவ்வூர் சிற்றம்பர் நகர் எனவும் சிற்றம்பர் பதி எனவும் குறிக்கப்பட்டிருத்தல் காண்க.

நம் தமிழ் நாட்டில் அம்பர், இன்னம்பர், நல்லம்பர் என்ற ஊர்கள் இருத்தலைப் பலர் அறிந்திருத்தல் கூடும். அவ் வூர்களைப் போல் சிற்றம்பர் என்ற ஊரும் இருந்துளது. இக் காலத்தில் அவ் வூரின் பெயர் மறைந் தொழிந்தது. எனினும், அவ் வூர் திருச்சிராப்பள்ளி என்னும் பெயருடன் இஞ்ஞான்று எல்லோர்க்கும் காட்சி யளித்துக் கொண்டு பெருமையுடன் விளங்குவது மகிழ்தற் குரிய தாகும்.

இதுகாறும் ஆராய்ந்து கூறியவாற்றால், பண்டைக் காலத்தில் சிராப்பள்ளி என்பது சிரா என்ற சமண முனிவரது தவப் பள்ளியின் பெயரா யிருந்தது என்பதும், பிறகு பல்லவ வேந்தனாகிய முதல் மகேந்திர வர்மன் அதனை இடித்து விட்டு, அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெய ராயிற்று என்பதும், அதன் பின்னர் அத் திருக்கோயில் அமைந்துள்ள நகரின் பெயராக வழங்கி வருகின்றது என்பதும், கோயிலின் பெயர் நகரின் பெயராகப் போய் விட்டமையின்[11], சிற்றம்பர் என்னும் அந் நகரின் பழைய பெயர் மறைந்து விட்டது என்பதும் நன்கு விளங்குதல் காண்க.

---

11 அங்ஙனமே பட்டீச்சுரம், திருவாவடுதுறை என்னுங் கோயிற் பெயர்கள் இக் காலத்தில் ஊர்களின் பெயர்களாக வழங்கி வருதல் அறியத் தக்கது.

# இசைத் தமிழ்

சங்கீதம் ப. சுந்தரேசன், கும்பகோணம்

அருமெறிய நம்தமிழ்மொழி, இவ்வுலகில், இக்காலம் பல்வேறு வகையானும் பரவி வளர்ந்துவரும் மொழிகளியாவினும் காலத்தான் மிக்க தொன்மை வாய்ந்த தெனவும், பொதுச் சிறப்புப் பலபொருந்திய தெனவும் அறிவியலிற்சிறந்த மொழி யாராய்ச்சியாளர் பலரும் அறிவர். மிகமிகப் பழங்காலத்திற்றுனே தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பெருமக்கள் பலரும் அறிவியல், இயற்கைக் கலையறிவு, இவற்றுள் மிகச் சிறந்த விளங்கினரெனவும், மேலும் அக்காலங்களில் அப்பெருமக்களிற் பலர் உலகில் ஏனைய நாடுகட்கும் நிலவழியானும் கடல் வழியானுஞ் சென்று தத்தமது அறிவியற் றிறனையும் கலைத் திறனையும் அந் நாடுகளில் வாழும் மக்களிடையே பரப்பி வாழ்ந்து வந்தனரெனவும், இக்கால வரலாற்றுசிரியர் பலருங் கூறுகின்றனர். அஃதெவ்வாறாயினும் இக்காலத்தைக் காட்டினும் மிகப் பழயகாலத்திலேயே மிகுதியான நிலப்பரப்பைக் கொண்ட இப்பரத கண்டத்தின் தென் பகுதியில் வாழ்ந்து வந்த தனிப் பெருமக்கள் வாயிலாகத் தோன்றி நீண்ட காலமாகவே வளர்ந்துவந்த நம் தமிழ் மொழி. காலவகையான் வேற்று மொழிகட் கிலக்காகி இற்றை நாட்புதுமையினுங் கலந்து புத்தம் புதியநூல் பலவுங் கொண்டு, அவ்வகையானுஞ் சிறப்புடன் வளர்ந் தோங்கி, தனது தொன்மை மிக்க சீரிய வனப்புச்சிறிதுங் குன்றாது இன்னும் என்றும் இளமை யோடிருத்தலில் வியப் பொன்றுமில்லை.

இற்றைக் கெத்துணையோ ஆயிரமாண்டுகட்கு முன்னரே தமிழ் மொழியை, அறிவியலிற் சிறந்த ஆன்றோர் பலர் இயல் இசை நாடகமென மூவகையான் முறைப்படுத்தி முத்தமிழெனப் போற்றி வளர்த்து வந்துள்ளனர். பின்னர் கால வகைக்கேற்ப முத்தமிழிலும் வல்ல புலவர் பெருமக்கள் பலரும் மூன்று தமிழ் வகைக்குமே தனித்தனியே இயற்கை யிலக்கணம் வகுத்து அதற்கேற்பப் பெருநூல் பல இயற்றியும்

முத்தமிழை வளர்த்து வந்தனர். அத்தகைய தனித்தமிழ் நூல்களிற் பல, சங்க காலங்களிலும், முந்திய பிந்திய காலங் களிலும் நிரம்ப இருந்தனவாம், அவையாவும் சங்க நூல் களிற் காணும் நூற்பெயர் வகையான் ஒருவாறு அறியலாம்.

உலகில் இவ்வாறு முதன்முதலில் மொழியையே மூவகைப்படுத்திய தனிச்சிறப்பு, நம் தமிழ்மொழி யொன்றிற்கே யமைந்ததென மொழியறிவுடை அறிஞர் பலரும் அறியாதிரார். பழயகாலப் புலவோரிற் பலர் முத்தமிழிலும் வல்லுநராய் விளங்கினரென நன்கு அறியக் கிடக்கின்றது, முற்காலப் புலவோர் பலரும் தாங்களியற்றிய இயற்றமிழ் நூல்களில் இன்றியமையாது இசை நாடகத் தமிழின் அடிப் படையான இலக்கணங்கள் பலவற்றைக் கூறியும், இசைநூல் பலவற்றை இயற்றமிழ் விதிக்கியையச்செய்யுள் வடிவிலியற்றியும், இவ்விரு தமிழானே நாடகத்தமிழ் நூல் பல செய்தும் வந்தமையால், சிலப்பதிகாரம் போன்ற பெருங் காப்பியங்களில் உரையாசிரியரால் எடுத்துக்காட்டாக முத்தமிழும் கையாளப்பட்டன. இவையாவும் காலமாறுபாட்டான் மாறுபாடெய்தி மறைந்ததும் மறையாததுமாய் நின்றன.

எவ்வகையானுஞ் சிறந்து விளங்கிய முத்தமிழ் நூற்கள் பல தமிழ் நாட்டின் புலவர் பெருமக்களின் வழிவழித் தோன்றலான பேரறிஞர் பலரால் சுவடிகளில் எழுதிவைத்துப் பெரிதும் பாதுகாத்து வைக்கப்பட்டு வந்தன. அவற்றுள் பெரும்பாலன நூற்கள் காலவகையொட்டி அச்சுவாகனமேறிப் பிழைத் திருத்தமுற்றுப் புத்தகவடிவிற் றேன்றிப் புதுமணங் கமழப்பெற்றன. ஆயினும் அறிஞர் கைக்கெட்டாது அழிந்த நூற்களும் பலவாம். பாதுகாத்து வெளிவந்த நூற் களில் இயற்றமிழளவு இசைத்தமிழும் நாடகத்தமிழும் வெளி வரவில்லை. ஏனெனில் நம் இசைத்தமிழன்னை இற்றைக்கு ஐந்நூறுண்டளவிற்கு முந்தியும் பிந்தியும் வேற்று மொழிப் பெயர் தாங்கி தமிழ் நாட்டில், உலவியதால் தமிழர்கள் கண் ணுக்குப் புலப்படா திருந்தனள். இக்கால வளவில் தென்னுட் டிசை வாணர் யாவரும் தங்களால் இயற்றப்படும் இசை நூல் களையும் இசைப் பாடல்களையும் வடமொழியில் இயற்றுவதே சிறப்பெனக் கருதினர். அஃதன்றி ஓரிரு புலவர்களால் தமிழில் இசைப்பாடல்கள் இயற்றப்பெற்றுல் அப்பாடல்களும் வடநூல் வழிநின்று அவ்வளவாகப் போற்றப்படாது தனித்து

நின்று விட்டன. இவ்வாறு தமிழ் நாட்டிலேற்பட்ட ஓர் சிற்றெல்லைக் காலச் சூழ்நிலையும், அக்கால இயற்றமிழ்ப் புலவோரின் கவனக் குறைவும், தொன்று தொட்டே ஒன்றாய் வளர்ந்து வந்த முத்தமிழில் இயற்றமிழை விடுத்து இசைத் தமிழை வேறுபடப்பிரித்து, இசைக்கலையே வேற்று நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டது போன்ற பொய்ம்மையைப் பரப்பியது. ஆனால் நம்நாட்டு இசையாவும் வடநூலில் வரையப் பெற்றாலும், இசைக்கருத்தியாவும் இசைத்தமிழைச் சார்ந்தவையே யாகும். இவையெலாம் ஒன்றற் கொன்று மாறுசெய்தியன.

ஐயப் பாடுகள்:— இசைத்தமிழைப் பற்றி இனியுந் தமிழ் மக்களுக்குத் தோன்றாத காலம் ஒன்று வரவே, எத்துணையோ நூற்றாண்டுகட்குப் பின்னர் இந் நூற்றாண்டில் அஃதும் சென்ற ஆண்டில் (சருவசித்து வைகாசித் திங்கள்) நம் தமிழன்னை தம்மக்கள் யாவருக்கும் பேரருள் பாலித்தாள். அத்தகையப் பேரருளின் பெரும்பயனே, மிக்க பழமையான இசைத்தமிழ், மீண்டும், தனது பழைய பெயரையே கொண்டு புதுமையாகத் தென்னாட்டில் வந்துலவத் தொடங்கி விட்டது. அஃதியாதெனில், தமிழன்னையின் தவப்புதல்வருள் ஒருவராய விபுலாநந்தப் பெருந்தகையாரின் பதினான்காண்டு இசைத் தமிழாராய்ச்சிப் பெருந் தவத்திற்கிரங்கி, அன்னை அருள் பாலித்த யாழ் நூல் எனும் இசைத்தமிழ் நூலென்பாம். இந்நூலால் தமிழ்நாட்டு மக்களன்றிப் பிறநாட்டு மக்கள் யாவருமே தென்னாட்டிசை யிலக்கணம் யாவையும் நன்கு அறிந்துணர வாய்ப்பு ஏற்படலாம். இனி முத்தமிழில் கடுவண்ணின்ற, இசைத் தமிழறிய இந்நாட்டார் யாவரும் சிறிதேனும் கவல வேண்டுவதில்லை, எனெனில்? நெடுங்காலமாகவே மறைந்திருந்த இசைத்தமி ழெனுமோர் பெரும் பட்டினமும் கண்டுபிடிக்கப் பட்டு, அப் பட்டினத்திற்குச் செல்லும் வழிகளும் (யாழ் நூலில்) அறிவிக்கப் பட்டு விட்டன. ஆகவே நாமும் நூலிற் கூறியருளிய வழியே சென்று இசைத்தமிழ்ப் பட்டினத்தை யடைந்து உண்மை யறிந்து வருவோமாக. இனி நூலைப் படித்துணர்ந்த போது நாம் பெற்ற சில உள்ளத்துணர்வுகளைச் சிறிது கூறுவாம். முதன் முதலில் யாழ்நூலை நாம் கலந்து படித்துணருங்கால் நமதுடலில் உள அனைத் தெலும்பும் நெக ஓராநந்தத் தேன் சொரியப்பெற்று நமதுள்ளமெனும் மாணவன் நூலாசிரியரின் வாக்கெனும் ஆசிரியருக் கடிமையாகி நிற்கின்றான். அவ்வாசிரிய

மாணவரிருவ ரிடையே நிகழ்ந்த சிலவற்றைக் கீழே குறிக்கின்றோம்.

ஆ. =தம்பி? நீ யார்?

மா. =ஐயா! அடியேன் ஒரு மாணவன், குடந்தையில் வாழும் பல்லவி வித்துவான் திருவேதாரணியம் இராமச்சந்திர அய்யர் எனும் சிறந்த இசைவாணரிடம் முறையே பன்னிரண்டாண்டு இசைக்கலை பயின்றேன். பயிற்சி பெறுங்காலை இசையிலக்கணம் யாவுமறிய ஆசைப்பட்டேன். அதனால் இக்காலத்துச் சில இசையிலக்கண நூற்களைப் படித்து வருகிறேன்.

ஆ. =தம்பி, தமிழ் நன்றாகப் படித்திருக்கின்றனையா?

மா. =ஐயா, கூடியவரையில் நன்றாகப் படித்துள்ளேன், சிறிது வடமொழிப் பயிற்சியும் தெலுங்கு மொழிப் பயிற்சியும் உண்டு.

ஆ. =தம்பி. இசைத்தமிழை யறிய உனக்கு விருப்பமுண்டா?

மா. =அதைத்தான் அடியேன் (மிக) நன்கு அறியத் துடிக்கின்றேன். இசை பயின்றதின் பயன் அதுவேயென ஏங்கிக்கிடந்து, பல நூல்களினின்றும் ஏதேதோ இசைக் குறிப்புக்களெல்லாம் தொகுத்தெழுதித் திணறுகின்றேன்.

ஆ. =தம்பி, கவல வேண்டா, இது ஒரு யாழ்நூல், பழய இசைத்தமிழ்ப் பெரும் பட்டினத்திற்குச் செல்ல, எம்முடன் இவ்வழியே வருக.

மா. =ஐயா. இதோ வந்தேன், எனதெண்ணம் யாவுமீடேற அருள் பாலிக்கவேண்டும்.

ஆ. =தம்பி. வாரும், இவ்வழிதான் நாம் செல்லுமிடத்தின் முதல் வழி. இதன் பெயர் விசுவாண்டுத் தமிழ்ப் பொழில். இனி நாம் கூறுவதை நன்குளங் கொளல் வேண்டும்.

மா. =ஐயா, அப்படியே தாங்கள் கூறி வாருங்கள், அடியேனும் கண்ணும் கருத்துமாய் இருந்து அறிந்து வருகிறேன். ஆனால்—

ஆ. =தம்பி. ஆனால் என்ன.

மா. =ஐயா. இப்பொழுது என்னைச் சுற்றியுள்ள இசைவாணர் பலர்.............?

ஆ. தம்பி. இற்றைக்கு எழுபத்தைந் தாண்டளவின் முன்பின் நம் நாட்டிசையுலக நிகழ்ச்சி ஒருவாறிருக்கட்டும்,

நீ நம் இசையிலக்கணம் அறிய ஆவலுடைய மாணவன் தானே? வருக. நீ எண்ணுவதெலாம், இசைப்பாடல்கள் நம்நாட்டில் வேற்று மொழிகளில் எழுந்தகாலம், இசை யிலக்கண நூல் குறைந்தகாலம் ஆகும்.

மா. =ஐயா. அப்படியானல் சரியே, அடியேனும், பழைய இசையிலக்கணம் அறியவே விரும்புகிறேன்.

ஆ. =தம்பி. அதோ பார் அதனை! அந்தப் பெரிய நீரோட்டந்தான், காலமெனும் பெயர் பெற்றுளது. அந் நீரோட்டத்தின் இருமருங்கும் இருந்து இசைபாடியவரை யும் சுருங்கக் கூறுகிறேன் கேட்பாய். அவர் சாமா சாத் திரியார், மற்றவர் தியாகராஜர், முத்துசாமி தீக்ஷதர், இம் மூவரின் இசைத்தொண்டு மிகவும் போற்றற் குரியது; அதோபார், அருணசலக்கவி முத்துத் தாண்டவர், இவர் தான் தமிழில் முதன முதலில் கீர்த்தனை செய்தவர், இன்றும் இவருக்குப்பின், பாபவிநாச முதலியார், கோபாலகிருட்டின பாரதி, என கிரம்பப் பலர் இருந்தனர். இவர்களை விடுத்து, முன்னேறிச் செல்வோம்;, இதோ பார், இவர் கோவிந்தாச்சாரி இவர் வேங்கடமகி, இவர் கோவிந்த தீக்ஷதர், இவர்கள் காலத்திய மன்னர்களெலாம் தஞ்சையை யாண்ட நாயக்க மன்னர்களாவர், இக்காலம் இசையிலக்கணப் பெருநூல் சதுர்த்தண்டி பிரகாசிகை, சங்கித சுதா போன்ற பல நூல் வடமொழியி லெழுதப்பட்டன, தம்பி. இவர்களிருக்கட்டும், முன்னேறுவோம், பார்த் தாயா, சாரங்கதேவரை. இவரே நம்தமிழ் நாட்டுத் தேவாரப்பண்களிற் சிலவற்றின் இலக் கணங்களைத் தமது சங்கிதாத்திநகாம் எனும் நூலில் எழுதிவைத்தவராவர், திருமுறைகண்ட காலத்திற்கு வந்து விட்டோம், தேவாரங்களிலமைந்த இசை யிலக்கணத்தைப் பாணர் மரபினுதித்த, பாடினியார் ஒருவர் ஆராய்வதைப் பார்ப்பாய், தம்பி வந்துகொண்டே யிரு, அதோ, ஆளு டைய பிள்ளையார் தமது பல்லக்கினின்று கீழிறங்கி இறை வனைப் பாடிச்செல்வதைப் பார்த்திடுவாய். அவரது பாடலுக்கு யாழ்வாசித்துச் செல்லும் பெரியாரைக்கண்டு வணங்குவாய், அவர்தாம் திருநீலகண்ட யாழ்ப்பாணர், அவர் கையிலிருக் கும் கருவிதான், சகோடயாழ். அக்கருவிக்குப் பழையபெயர் செம்முறைக் கேள்வி, தம்பி, வருவாயாக, இது சிலப்பதிகார காலம், இக்காலம் பல்வேறு இசைக்கருவிகள் உண்டு, அஃ தன்றித் தோற் கருவிகளும் பலவுண்டு, இன்னும் முன்னேறிச் செல்வோம், பற்பல பாணர்களையும், பாடினியாரையும், பத்

பல வகை யாழ்க் கருவிகளையும் பார்த்திடுவாய், இவற்றின் இசை வகையாவும் உனது கையில் இருக்கும் யாழ் நூல் கூறும், தம்பி. பொதியமலையில் முத்தமிழும் நிரம்ப ஆராயப்படுகிறது. இங்கேயே சற்று நிற்பாயாக, அதோ அங்கே பார். பேரியாழ்க் கருவிகளையும் மற்ற யாழ் வகைகளையும் (இருபத்து ஒன்று) (ஆயிரம்) (பதினான்கு) (ஒன்பது) இவ்வாறு ஒவ்வொரு கருவிக்கும் நரம்புகள் கட்டியிருப்பதை நன்கு காணுதி. இதுவே யாழ்க் கருவிகளில் பெரியது. இக்கருவியிற்றான் (பேரியாழ்)பழைய கால இசை யமைந்துளது. இதற்கு முந்தியது, அதோ? பழந் தமிழ் நாட்டுப் பஃறுளியாற்றங்கரை. அங்கு நிற்கும் கானத்திடையரைக் காணுதி. அவர் கையிலிருப்பது மிகத் தொன்மையான வில்யாழ். அதனினும் பழையது. யாழ் தோன்றக் காரணமான குழலைப் பாராய். இக்குழலில்தான் இசைக்கலையே தோன்றியது தம்பி. நாம் இதுகாறும் வழியிற் காட்டியவை யாவும் நன்கு அறிந்து கொண்டாயா? இனி இசைத் தமிழ்ப் பழைய பட்டினமிதுவே. இங்கு நீ அமைதியாகக் கருத்தொருமித்து இசை தோன்றி வளர்ந்த முறை யாவையும் நன்கறியலாம். அவற்றை நன்கு தெளிவாகக் காண ஆங்காங்கு நமது துணை உனக்குக் கிடைக்கும்.

மா. =ஐயா! எல்லாமறிந்து வியப்புற்றேன், தங்கள் பேரருட்டுணைக் கொண்டே இசைத்தமிழை யானுமறிந்து இவ் வையத்தார் பலரையும் அறியச் செய்வேன் வணக்கம் வணக்கம்.

மேற்குறித்த யாவும் எமது உள்ளத்துணர் வென்பதை மீண்டும் அறிவித்துக்கொண்டு, யாழ்நூலைப் படித்துணர்ந்தாலும் பேராசிரியரிடம் நேராகவே சில வினாக் கேட்டு விடை பெற்றமையானும், அப்பெரியார் அருட்டுணையால் யாமும் அப் பெருந்தகையின் பொன் மொழிகளைத் தாங்கித் திகழ்ந்த நம் தமிழ்ப் பொழிலின்கண் எமது புன்மொழியான் இசைத் தமிழ் எனுந் தலைப்பின் கீழ்க் கட்டுரை வரையத் துணிந்தனம்.

அடியேமது இவ் வறியாமைக்கு அன்பர்கள் மன்னிப்பளிப்பார்களாக. இசைத்தமிழ்க் கருத்துகள் பலவற்றை, யாழ்நூலிற் கூறியதையே ஆதாரங்காட்டி, அவற்றைக் குறியீட்டெழுத்துக்களான் விளக்கியும், வாய்ப்பேற்படுங்காலை நம் சங்கத்தில் நேரே வந்து கண்டத்தாற் பாடியுங் காட்ட ஆவலுடையேமென அன்பர் பலருக்கு அறிவிக்க ஆசைப்படுகின்றேம், வணக்கம்

---

(96 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கணிக்கப் படுவதா என மனம் புழுங்கினன்; தனக்கு ஆதரவு செய்வார் போல் வந்த செல்வர்களும் தலைவர்களும் தமிழ்க் குடியைக் கெடுப்பவர்களாய் மாறி, இந்திக்கும் வடமொழிக்கும் அடிமைகளாய் மடிவதைக் கண்டான். இந்தியின் நுழைவை எதிர்த்தான்; சிறைப்பட்டான்; குருதி சிந்தினன்; உயிரும் கொடுத்தான். அப்போர் ஒருவாறு ஒழிந்தது. இனி, உரிமை பெற்றுள்ளோமாதலின் எதிர்த்தொழித்த இந்தி தன் நாட்டில் நுழையாதென எண்ணிய தமிழன் ஏமாந்தான். இந்தி மீளவும் அவனது உரிமையைப் பறித்து அடிமைப் படுத்த வந்தது காண்கின்றான். அறத்தைக் கடவாதவன், ஆண்மை குன்றாதவன், தலைவன் ஆணைவழி நிற்பவன், அறிஞன், அறவன், மறவன், மலை வந்து வீழினும் நிலை கலங்காதவன் இந்தியை எதிர்க்கின்றான். இது முறை தானே என்கின்றனர்.

தன்னுடைய இனிய தனித்த செந்தமிழே நிலவிய காலத்தில் உணவுக்கும் உடைக்கும் பிற நாட்டவரைக் கையேந்தாமல் வாழ்ந்தது தமிழகம். 'நாடென்ப நாடா வளத்தன' என்று நாட்டுக்குத் தமிழறிஞர் இலக்கணம் வகுத்தனர். பின்பு வடவரும் களப்பிரரும், பல்லவரும் கொணர்ந்த வடமொழியால் தமிழ் மக்களிடையே சாதிப் பிரிவுகளும், சமய வேற்றுமைகளும் பெருகி அதன் ஒற்றுமையைக் கெடுத்தழித்தன என்றும் கூறுகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் அரசியலை அவர்கள் தங்கள் ஆங்கிலத்திலேயே நடத்தினர்கள். பொது மக்களுக்கு அந்த மொழி தெரியாது. அதனல் அரசியலில் நடப்பது பொது மக்களுக்குத் தெரியாமல் இருந்து வந்தது. வேற்று மொழியில் நடைபெறும் அரசியல் மொழியினல் தமிழன், தேய்ந்து வலி யிழந்து, விறகு வெட்டியாய்க், கூலியாளாய், வேறு நாடுகட்குச் செல்லும் நாடோடியாய்த் துன்புறுகின்றான். ஒரு சில அறிஞர்கள் தோன்றி அயல் மொழி வாயிலாகத் தமிழன் அடிமைப்பட்ட திறத்தை மக்களுக்கு எடுத்தோதினர். அயல் மொழித் திரை மறைவில் நாட்டு மக்களுக்கு இழைக்கப் படும் இன்னல்களை நாட்டவர் உணரத் தலைப்பட்டனர். அவர்களில் பலர் ஆங்கிலம் கற்று நடக்கும் நடைமுறைகளை யறிந்தனர். உரிமைப் போர்செய்த காங்கிரசியக்கமும் நாடுதோறும் அந்தந்த நாட்டு மொழியிலேயே தன் பணியைச் செய்தது. அதனல் பொது மக்களுக்கு வேற்று மொழியில் அரசியல்

நடத்துவதில் ஐயப்பாடு மிகவும் பெரிதாயிற்று. முடிவில் ஆங்கில மொழி வாயிலாக நிகழும் அரசியலில் நம்பிக்கை குறைய, அதன் எதிர்ப் பியக்கத்துக்கு மக்கள் ஆதரவுசெய் தனர். தங்களுக்குத் தெரியாத வேற்று மொழியில் நடத்தும் அரசியலில் தீராத ஐயமும் அருவருப்பும் எதிர்ப்பும் பொது மக்களுக்கு உண்டாகுமாறு செய்தவர்கள் இந்தியைப் புகுத்தும் இந்த அரசியல் வாதிகளே யாவர் என்று கொள்கின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் வட நாட்டுத் தலைவர்கள் ஏவுவதைச் செய்பவர்களே தவிரத் தங்கள் அறிவிற் பட்டவைகளை எண்ணிச் செய்யும் ஆற்றல் இல்லாதவர் என்றும் கருதுகின்றனர். இவர்கள் இந்திய நாட்டுத் தலைமை அரசியலை இந்தியில் நடத்தப் போவதாகச் சொல்லுகின்றார்கள். அதே நிலையில் நம் மாகாண அரசியலை நமது மொழியில் நடத்தப் போவதாகவும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்பவர்கள், நடைமுறையில் எல்லாச் சிறு பிள்ளைகளும் கட்டாயம் இந்தி படிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்கள். இத் திட்டத்தை யேற்றுக்கொண்டால், சில ஆண்டுகள் கழித்தும் இந்தி படித்தவர் தொகை சிறிது, பெருகித் தோன்றும். அப்போது வட நாட்டுத் தலைவர்கள், இந்தியிலேயே மாகாண ஆட்சியும் நடத்த வேண்டுமென்று கட்டளை யிடப் போகிறார்கள். வட நாட்டார் சொற்படி உழைக்கும் நம் மாகாணத் தலைவர்களும் மாகாண ஆட்சியையும் நாம் அறியாத, நமக்குப் புறமான இந்தியிலே நடத்தி, வடவர்க்கும் பிறர்க்கும் அடிமையாக வாய்ப்புண்டாகச் செய்வார்கள் என்று தமிழர் கருதுகின்றனர். இந்தி மொழி வந்து அரசியலில் இடம் பெற்ற பின் பொதுமக்கள் அதன் போலித் தன்மையை யறிந்து வெறுத்துப் பகை கொண்டு திரண்டு மீளவும் ஒரு போர் செய்து வருந்தும் நிலை உண்டாகக்கூடாது என்று தமிழன் கருதுகிறான். அதற்காக இப்போதே இந்தியை அமைதியான முறையில் எதிர்க்கின்றான். இது முறைதானே என்கின்றனர்.

சரித்திர காலந் தொட்டு உரிமையோடு வாழ்கின்ற ஒரு நாட்டு மக்களை வென்ற வேந்தன் அவர்கள் என்றும் மீளா அடிமைகளாக இருக்க விரும்பு வானானால் அவன் செய்ய வேண்டியது இது என்று ஜெர்மன் தத்துவ ஆசிரியர் ஒருவர் சொல்லத் தொதடங்கி ‘அந்த வேந்தன் முதலாவதாகத் தன்னால் வெல்லப்பட்ட மக்களுடைய மொழியைச் சிதைக்க வேண்டும். அஃதாவது அவர்களுக்

குப் புறம்பான தன் மொழியைப் புகுத்தி அதன் வாயிலாக அவர்கள் மொழியைச் சிதைக்க வேண்டும். அப்படிச் சிதைந்தால், அவர்கள் தம் உள்ளம் சிதைந்து தன் மொழிக்கும், பிறகு தனக்கும் தன் இனத்தவர்க்கும் என்றும் மீளா அடிமையாவர்' என்று அறிவுறுத்துகின்றதை மேற்கோள் காட்டுகின்றனர். அந்த முறையைச் சப்பானியம், கொரியா நாட்டிலும் மஞ்சூரியா நாட்டிலும், கையாண்டு முதலில் வெற்றியெய்தினர். அண்மையில் நம்நாட்டில் ஆங்கிலேயர் ஆங்கில மொழியைப் புகுத்தி நம்மவரை அடிமைப் படுத்தி வெற்றிகண்டனர். இப்போது கட்டாயமாகத் திணிக்கப் பெறும் இந்தி மொழியும் அம் முறையிலேயே புகுத்தப் படுகிறது. உணவுக்கும் உடைக்கும் அன்றாடம் வடநாட்டுத் தலைவர்களை எதிர்நோக்கி ஏக்கற்று நிற்கும் நிலை யுண்டாகியதே என வருந்தும் தமிழன் அவ் வருத்தத் தினை என்றும் மாறாது நிலைபெற நிறுத்த வரும் இந்தியை எதிர்த்துநிற்பது முறைதானே என்று வற்புறுத்துகின்றனர்.

மக்கள் அறியாமையிலிருந்து எழுத்தறி வுடையவர்களாவதற் குள்ளாக இன்றைய அரசியல் தலைவர்கள் என்றும் இந் நாட்டு மக்களை அடிமைப் படுத்த வல்ல இந்தி மொழியை விரைந்து மறைமுகமாகக் கட்டாயப் படுத்துவதைக் காட்டிலும் தமிழ் நாட்டு மக்களுக்குத் தீங்கு தரும் செயல் வேறில்லை என்பதைத் தமிழன் அறிகிறான்; தன் இனத்துக்குக் கேடு செய்யக்கூடிய இந்த இழி தொழிலைத் தமிழ்க் குடியிற் பிறந்தவர்களே செய்யத் தலைப்படுவது காணுந் தோறும் அவன் நெஞ்சம் புழுங்கி இந்தியை எதிர்க்கின்றான். இது முறை தானே என்கின்றனர்.

பல மொழிகள் பேசுகின்ற பல நாட்டினரையும் ஒன்று சேர்த்து இந்தி மொழி என்ற கயிற்றால் கட்டியாள நினைப்பது, ஐரோப்பாக் கண்ட முழுவதும் ஒரு அரசியலுக்குள் ஒரு மொழியால் கட்டி யாளக் கருதுவது போலக் கூடாச் செயலாகும் என்ற கருத்தும் குறிப்பாகத் தோன்ற அண்மையில் நம் சென்னை மாநில ஆட்சித் தலைவராயிருந்து நீங்கிய சர் ஆர்ச்சிபால்டு நை அவர்கள்தாம்விடை பெற்றுப் போகுங் காலத்துச் சென்னைச் சட்ட சபையில் எடுத்து உரைத்தார். அப்போது நம் மாகாணத் தலைவர்களும் அமைச்சர்களும் அதனைக் கேட்டிருப்பர். கேட்டிருந்தும் ஒரு சிறிதும் எண்ணிப் பார்க்க மனங் கொள்ளாது போனதைத் தமிழன் ஒவ்வொருவனும் எண்ணுகிறான்; அதனால் இவ் வெதிர்ப்பினைச் செய்கின்றனர். இது முறை தானே என்னப்படுகிறது.

தமிழ் நாட்டின் வரலாற்றை நன்கு ஆராயாமல் பத்தாண்டினரான இளஞ் சிறுர்களுக்கு மூன்று மொழிகளைக் கட்டாயப்படுத்தும் முறையில், சென்னை அரசியலாரது கல்வித்திட்டம் அமைந்துள்ளது. தமிழ் மாணவர்கள் தம் தாய்மொழியாகிய தமிழை முதன் மொழியாகப் பயில்வதும், உலகமொழியாகிய ஆங்கிலத்தை உலகியல் நூல் வளர்ச்சி கருதித் துணைமொழியாகப் பயில்வதும் ஆகிய செயல்முறைகளை இந் நாட்டவர் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனல், பத்துப் பன்னிரண்டு அகவைக்கு உட்பட்டவர்களாகிய இளஞ் சிறுர்களுக்குத் தாய்மொழி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுடன் இந்தியையோ அல்லது அதன் நிலையிற் பெயரளவிற் குறிக்கப்படும் பிற மொழியினையோ கட்டாய பாடமாகத் திணித்து மூன்று மொழிகளை வற்புறுத்திப் பயிலச் செய்தல் பயனுள்ள கல்வி முறையாகா தென்பதனைக் கல்வித் துறையிற் பயின்ருேர் நன்குணர்வர். சென்னை அரசியலார் தாங்களே ஏற்படுத்திய கல்வித் துறைக் குழுவினரின் கருத்துக்கு மாருக இந்தியைக் கட்டாயப் படுத்தியுள்ளார்கள். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இந்தி மொழியாசிரியரை அமர்த்த வேண்டுமென வற்புறுத்தி மூன்று மொழிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களே இரண்டாந்தரப் பள்ளியிறுதித் தகுதித் தேர்வுக்குச் செல்லுதற் குரியர் எனப் பொருத்தமில்லாத திட்டத்தை விதித் துள்ளார்கள் என்பதனை யாவரும் அறிவர். இங்ஙனமாகவும் அமைச்சர் முதலியோர் இந்தி கட்டாய பாட மன்று எனச் சட்ட சபையிலும் பிற மேடைகளிலும் பேசி வருவது பொருத்தமாகாது. அவர்கள் கூறுவது பொருந்தாது எனத் தெரிந்திருந்தும் சட்ட சபை யுறுப்பினர்கள் பொருந்தாத கல்வித் திட்டத்தை ஆதரித்து வாய் வாளா விருப்பது தமிழ் மக்களுக்கு இடர் விளைப்பதாகும். இள மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் தடை செய்யும் நிலையில் மூன்ரும் மொழியாகக் கட்டாயமாகப் புகுத்தப்படும் இந்தி தமிழ் வளர்ச்சியையும் தமிழ் மக்களின் கல்விப் பெருக்கத்தையும் தடுப்பதாகும். அருட்டிரு. மறைமலை யடிகளார், நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழ்ப்பெரும் புலவர்களும் பேரறிஞர்களும் தெளிவாக விளக்கிக் கூறிய அறிவுரைகளைக் கல்வி யமைச்சர் முதலியோர் ஏற்றுக்கொள்ளல் அவர் தம் தகுதிக்கு ஏற்றதாகும் என்று விரும்புகின்றனர். ஒரு சாரார் கூறும் கட்சியைச் சற்று விரிவாக எடுத்தெழுதி யுள்ளோம். அடுத்த மலரில், இந்தி ஆதரிப்பாளர் கூற்றையும், நம் கருத்தையும் வெளியிடுவோம்.

தொடரும்.

நம் சங்கத்தில் இவ்வாண்டு கலைமகள் விழா, புரட்டாசி 17-ம் நாள் முதல் 26-ம் நாள் முடிய (1948 அக்டோபர் 2-11) சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் அடியிற் காணுமாறு அறிஞர் பலர் சிறந்த சொற்பொழி வாற்றினார்கள்.

சர்வதாரி,
புரட்டாசி,

17 வித்துவான்.
திரு. ப. இராசகோபாலபிள்ளை அவர்கள்—இலக்கிய நிலை:
தமிழாசிரியர், நகர உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம்.

18 திரு N S. சந்திரசேகரன். அ-ள், திருவாரூர்.—இசைவிருந்து

19 வி-ன். திரு. N. குப்புசாமி அ-ள், —சிலம்பு:
விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

19 திரு. A. சக்கரவர்த்தி முதலியார் அ-ள், B A., —நாடக இயல்:
கூற்றக் கூல உதவலுவலர் (Taluk Supply Officer),
தஞ்சை.

20 வி-ன். திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை அ-ள்,—
தமிழ் இலக்கியக்கொள்கை:
ஆராய்ச்சித் துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

20 வி-ன். திரு பு. க. புன்னைவனநாத முதலியார் அ-ள்,—
நாமகள் நற்பாடல்:
பேராசிரியர், தருமபுர ஆதினப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

21 வி-ன். திரு க. வெள்ளைவாரண முதலியார் அ-ள்,—
ஈங்கோய் எழுபது:
விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

22 திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அ-ள்,—
திருமுருகாற்றுப்படை:
திருவாடுதுறை ஆதீனப் புலவர், கும்பகோணம்.

23 திரு C. கோவிந்தராசன் அ-ள், —ஓவியமும் காவியமும்:
ஓவிய ஆசிரியர், உமாமகேசுவர நடுநிலைப்பள்ளி, கரந்தை.

24 வி-ன். திரு இராமகோவிந்தசாமி பிள்ளை அ-ள்,திருவிருத்தம்:
பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

சர்வதாரி, புரட்டாசி,

25 வி-ன். திரு. நா. இராமசாமி செட்டியார் அ-ள், —திருமணம்: பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

26 திரு P. சுந்தரேசன் அ-ள், இசை ஆசிரியர், —தமிழிசை: கும்பகோணம்.

இவ்வறிஞர் பெருந் தகையர்களுக்கும் கலை மகள் விழாச் சார்பான பணிகளை மேற்கொண்டாற்றிய வித்து வார் திரு. மு. சடகோப ராமாநுசம் பிள்ளை அவர்களுக் கும் சங்கத்தின் நன்றி உரியதாகும்.

---

நம் சங்கத்தலைவர் அவர்கள் சங்கத்திற்குப் பெரும் பொருள் திரட்டிச் சேமிக்கும் பொறுப்புடன் வெளியிட் டுள்ள வேண்டுகோளின்படி உதவியுள்ள அன்பர்கள் விவ ரங்களைக் கீழே குறிக்கின்றோம். இவ்வன்பர் பெருமக்க ளுக்கெல்லாம் சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

க. S. M. R. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், B.A , B.L., வழக்குரைஞர் நாகப்பட்டினம் (பகுதி) ரூ. 25

உ. திரு. N. K. இராசுப் பிள்ளை அவர்கள், நாகப்பட்டினம் (பகுதி) ரூ. 25

ங. திரு. சோ. சானகி அம்மையார் அவர்கள், திருவாரூர் ரூ 250

ச. திரு. G. இராமாநுச முதலியார் அவர்கள், திருவாரூர். ரூ. 250

ரு. திரு. கு. ம. குருசாமி பிள்ளை அவர்கள், காரைக்கால் (பகுதி) ரூ. 100

சா. திரு. சி. மு. சாமிநாத பிள்ளை அவர்கள், காரைக்கால் (பகுதி) ரூ. 100

எ. திரு வீ. செ. குருசாமி செட்டியார் அவர்கள், காரைக்கால் ரூ. 100